# நுழைவு கோரல்

## தெற்காசியாவில் பால்நிலை-சார் வன்முறையை ஒழிப்பதற்கு செய்ய வேண்டியது என்ன?

வீதிகளில் அல்லது இல்லங்களில் பெண்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படாதபட்சத்தில், பொருளாதார ஆற்றல் உள்ளடங்கலாக அவர்களுடைய ஆற்றல் மட்டுப்படுத்தப்பட்டு விடும். மறுபுறத்தில் அது நாடுகளின் வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான ஆற்றல்களையும் மட்டுப்படுத்தி விடுகின்றது. கடந்த டிசம்பர் மாதத்தில் புதுடில்லி நகரில் பெண் ஒருவர் குழு வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்டு, கொலை செய்யப்பட்ட சம்பவம் உள்ளடங்கலாக அண்மைய நிகழ்வுகள், பொது மக்கள் மற்றும் தனியார் தளங்களில் பெண்கள் மற்றும் சிறுமிகளில் தாக்கத்தை ஏற்படுத்தும் பாலியல் பலாத்காரம் மற்றும் வேறு வகையான பால்நிலை சார் வன்முறை தொடர்பான விழிப்புணர்வை தூண்டியுள்ளது.

ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள, உலக வங்கியின் வசந்த கால கூட்டத் தொடரின் அமர்வு ஒன்றில் தெற்காசியாவைச் சேர்ந்த நிபுணர்கள் குழுவொன்று இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடவுள்ளது. இந்த கலந்துரையாடல்களுக்கு மேலும் தகவல்களை இணைக்கும் விதத்தில், தெற்காசியாவில் வாழும் 18-25 வயதுக்கு இடைப்பப்பட்ட இளைஞர்களுக்கான போட்டி ஒன்றினை உலக வங்கி ஒழுங்கு செய்துள்ளது. **'உங்களுடைய நாட்டில் பால்நிலை சார் வன்முறையை ஒழிப்பதற்கு செய்ய வேண்டியது என்ன?'** என்ற கேள்விக்கு ஏற்ற ஆக்கப்பூர்வமான கருத்துக்களை நாம் உங்களிடம் இருந்து எதிர்பார்க்கின்றோம்.

குறுஞ்செய்தி (SMS) வடிவில் உங்களுடைய பதில்கள் அமைந்திருக்க வேண்டும். இடைவெளி உள்ளடங்கலாக 140 சொற்களுக்கு மேற்படாததாக உங்களுடைய எண்ணம் இருத்தல் வேண்டும். +94777256076 என்ற இலக்கத்திற்கு குறுஞ்செய்தி அனுப்புதல் அல்லது nogenderviolence@worldbank.org என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் செய்தல், அல்லது உலக வங்கி, முதலாவது மாடி, DFCC கட்டிடம், 73/5 காலி வீதி, கொழும்பு 3, இலங்கை என்ற முகவரிக்கு தபால் மூலம் உங்களுடைய பதில்களை அனுப்பி வைக்கலாம்.

உங்களுடைய நாட்டின் தேசிய மொழியில் அல்லது ஆங்கிலத்தில் செய்திகளை அனுப்பி வைக்கலாம். உங்களுடைய முழுப்பெயர், தொலைபேசி இலக்கம், மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் குறிப்பிட மறவாதீர்கள்.

**உங்களுடைய நுழைவுகள் மார்ச் மாதம் 15ஆம் திகதி ஜி.எம்.ரி நேரப்படி நள்ளிரவு 12 மணிக்கு முன்பதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.** உலக வங்கி நிபுணர்களால் அவை மதிப்பாய்வு செய்யப்படும். ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ள வசந்த கால கூட்டத் தொடரிற்கு முன்னர் வெற்றியாளர்கள் அறிவிக்கப்படுவர்.

**பரிசுகள்:** 10 வெற்றியாளர்களுக்கு கையடக்கமான வீடியோ பதிவு கமராக்கள் பரிசாக வழங்கப்படும். அத்துடன், வாஷிங்டன் நகரில் நடைபெறும் உலக வங்கியின் வசந்த கால கூட்டத் தொடரின் போதும், வெற்றி பெறும் செய்திகள் கலந்தாய்வுக்கு பயன்படுத்தப்படும். அத்துடன், உலக வங்கியின் இணையத்தளம் மற்றும் சமூக ஊடகத் தளங்களிலும் வெளியிடப்படும்.

**தகவல்கள்:** 18 – 25 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்கள் மாத்திரமே போட்டியில் கலந்து கொள்ள முடியும். 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் 15ஆம் திகதி வரையே போட்டிக்கான

நுழைவுகள் ஏற்றுக் கொள்ளப்படும். ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பூட்டான், இந்தியா, மாலைதீவுகள், நேபாளம், பாகிஸ்தான் அல்லது இலங்கை போன்ற நாடுகளில் வசிப்பவர்கள் மாத்திரமே போட்டியில் கலந்து கொள்ள முடியும். உலக வங்கி ஊழியர்கள் மற்றும் கலந்தாய்வாளர்களும், அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களும் போட்டியில் பங்குபற்ற முடியாது. உங்களால் அனுப்பி வைக்கப்படும் கருத்துக்கள் உலக வங்கி குழுமத்தின் உரித்துடையாதாவதுடன், நன்றி தெரிவித்தல் அல்லது நன்றி தெரிவித்தல் இன்றி, எந்தவொரு வடிவத்திலும் மீளப் பயன்படுத்தப்படலாம் அல்லது பிரசுரிக்கப்படலாம். 10 வெற்றியாளர்களுக்கும் குறைந்த எண்ணிக்கையிலான வெற்றியாளர்களை தெரிவு செய்வதற்கான அல்லது நுழைவுக்கான தகுதிகளை பூர்த்தி செய்யாத பட்சத்தில் வெற்றியாளர்களை தெரிவு செய்யாதிருப்பதற்கான உரிமை உலக வங்கிக்கு உள்ளது.